# ஆபத்தில் உதவுவோம்



நீரைத் தேடிக் குருவி ஒன்று
நீண்ட தூரம் பறந்தது.

வீட்டின் முன்னே பாத்திரத்தில்
வேண்டிய நீரும் இருந்தது.

தாகம் தீரத் தண்ணீரைத்
தானும் பருகி மகிழ்ந்தது.

வீட்டில் வாழும் பூனை ஒன்று
வேட்டை ஆட நினைத்தது.

மெல்லச் சென்று பூனை அதை
மெதுவாய்ப் பிடிக்கப் பார்த்தது.

காட்சி இதனைக் கண்ட கண்ணன்
கலங்கித் துடித்துக் கத்தினான்.

கத்தும் சத்தம் கேட்டதும்
கணத்தில் குருவி பறந்ததே!

குறிப்பு: * சிறு வினாக்களைக் கேட்டு மாணவர்கள் பாடலைக் கிரகிக்கச் செய்யவும்.
* இது போன்ற கதைப் பாடல்களை மாணவர்களுக்கு முன்வைக்கவும்.